**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.5/2021 . நாள்.21.08.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கணேசன் | **வயது** | 65 |
| **த/பெ. க/பெ.** | முத்துமாரி கவுண்டர் | **மதம்** | |
| **முகவரி** | பண்ணந்தூர் | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.1 ஆஜர். 4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1970 ம் வருடம் பாகப்பிரிவினை ஏற்ப்பட்டது மேற்படி பாகப்பிரிவினையும் A–Schedule சொத்து மற்றும் B–Schedule சொத்து என பாகம் பிரிக்கப்பட்டது. A–Schedule சொத்து பெரியண்ணகவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது.B–Schedule சொத்து முத்துமாரி கவுண்டர், மீனாட்சி மற்றும் எனக்கு ஒதுக்கப்பட்டது. B தபசில் சொத்து எங்கள் மூவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் மைனராக இருந்ததால் எனது தகப்பனார் எனக்கு கார்டியனாக இருந்தார் பி–அட்டவணை சொத்தில் என்ன சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் ச.எண்.261–ல் 1.5 ஏக்கர் உள்ளது. ச.எண்.646 ல் 2 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. ச.எண்.806 ல் 1.5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. அதில் மாஞ்செடி உள்ளது.ச.எண்.242 மற்றும் 243 சேர்த்து 1/4 ஏக்கர் நிலம் உள்ளது. ச.எண்.235 ல் 15 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. மேற்படி சொத்தில் நாங்கள் மூவரும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்று சொன்னால் அதில் முத்துமாரி கவுண்டர் மற்றும் எனக்கு மட்டும் தான் உரிமை உள்ளது. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 4–வது பாராவில் பி–அட்டவணை சொத்துகளை முத்துமாரி கவுண்டர், நான், மீனாட்சி ஆகியோர்கள் அனுபவித்து வந்தோம் என்று குறிப்பிடப்பட்டது என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது. மேற்படி பி–அட்டவணை சொத்தில் ச.எண்.235/1 ல் 48 சென்ட் நிலத்தை ராமமூர்த்தி கவுண்டர் குமாரர்கள் சுப்ரமணி மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு நாங்கள் கிரையம் செய்து கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். மீனாட்சி அம்மாளுக்கு பி–அட்டவணை சொத்தில் உரிமை இருப்பதால் தான் அவரும் மேற்படி

கிரைய பத்திரத்தில் கையெழுத்து செய்து கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினையில் ச.எண்.234 ல் கண்ட சொத்துக்கள் பி–அட்டவணையில் எங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த சொத்து என்னுடைய கிரைய சொத்தாகும். ச.எண்.234 ல் விஸ்தீரணம் 24 சென்ட் என்று பத்திரம் செய்து விட்டார்கள் ஆனால் தற்போது அளக்கும்போது 18 சென்ட் தான் உள்ளது. ச.எண்.234 ஏ அட்டவணை சொத்தை உட்படுத்தி பாகமாக ஒதுக்கி உள்ளார் என்று சொன்னால் சரிதான். நான் ச.எண்.234 ல் பெற்ற விஸ்தீரணம் பூமியில் ஒரு மாதிரியும் கிரைய ஆவணத்தில் ஒரு மாதிரியும் மாறுப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். ச.எண்.234–க்கான சிட்டா பெரியண்ணன் பெயரில் தான் உள்ளது. நான் ச.எண்.234 ஐ கிரையம் பெறும்போது முன்பாத்தியஸ்தர்களிடம் இருந்து அவர்கள் பெயருக்குண்டான மூல ஆவணங்களை நான் கேட்டுபெறவில்லை. ச.எண்.234/2 சொத்தை பொருத்து பெரியண்ணனுக்கு பாத்தியப்பட்டு அவருடைய சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

2.ச.எண்.235/1பி– ல் 40 சென்ட் நிலம் மீனாட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 05.06.1972 தேதிய கிரைய பத்திரத்திலும் 1–ம் பிரதிவாதியை உட்படுத்தி கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தை அதே சர்வே எண்ணில் மீனாட்சி தான் அனுபவித்து வருகிறார். மீனாட்சி 2015 ஆம் வருடம் இறந்துவிட்டார். உயிருடன் இருந்துவரை அவர்தான் அனுபவித்து வந்தார். பாகப்பத்திரத்திற்க்கு பின்பாக மேற்படி 1972 தேதிய கிரையபத்திரம் ஏற்ப்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். மீனாட்சிக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தில் 1–ம் பிரதிவாதிக்கு உரிமை இருந்த காரணத்தால் தான் அவரும் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மீனாட்சிக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தையும் பாகம் மூலமாக வந்த சொத்தையும் அவர் உயிருடன் இருக்கும்வரை அவர் அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அவர் அனுபவத்தின் அடிப்படையில் அவருக்கு பட்டா.சிட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். கூட்டு பாத்தியம் இருந்த காரணத்தால் தான் பி–அட்டவணை சொத்தை பொருத்து எனது பெயரிலும், எனது தகப்பனார் பெயரிலும், எனது சகோதரி பெயரிலும் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பி–அட்டவணை சொத்தை

பொருத்து பி.கே.முத்துமாரி கவுண்டருக்கு உள்ள பாகத்தை பொருத்து அவர் இறக்கும் வரை எவ்வித ஆவணங்களோ எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். முத்துமாரி கவுண்டர் 1991ம் வருடம் இறந்தார். முத்துமாரி கவுண்டர் இறந்தபிறகு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவரது வாரிசுகள் அனைவருக்கும் சமபாகம் உள்ளது என்று சொன்னால் முத்துமாரி கவுண்டருக்கு தனியாக பாகம் இல்லை. முத்துமாரி கவுண்டருக்கு பி–அட்டவணை சொத்தில் 3–ல் ஒரு பாகம் உள்ளது என்றும் அவரது இறப்பிற்க்கு பிறகு அவரது பாக சொத்தில் அவரது வாரிசுகளுக்கு சமபாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் கண்ட சில சொத்துக்களில் பிரதிவாதிகளின் பெயர் வருவாய் துறை ஆவணங்களின் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

3. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டு பாகத்தை பொருத்தும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுப்படி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்தை தவிர இதர சொத்தில் தனி உரிமை கேட்க எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் 22.10.2020 ஆம் தங்களுக்குள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொருத்து பாகப்பிரிவினை செய்தார்கள் என்று சொன்னால் அவர்கள் சொத்து செய்தார்கள். அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொருத்து நான் எவ்வித பரிகாரமும் கேட்க முடியாது என்று சொன்னால் என்னுடைய சொத்தையும் சேர்த்துள்ளார்கள். பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருக்கும் சொத்துக்களை பொருத்து எவ்வித தடை உத்தரவும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொருத்து அவர்கள் வில்லங்க பாராதீனம் மேற்கொள்ள நான் எவ்வித ஆட்சேபனை செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 02.12.1970 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்திற்க்கு பின்னிட்டு இரத்த பாத்தியம் தவிர சொத்தில் பாத்தியம் இல்லை என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சரியான சொத்து விவரங்கள் குறிப்பிடாமலும், வழக்குமூலம் இல்லாமலும், எனக்கு பாத்தியப்படாத கூட்டு பாத்திய சொத்தை பொருத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால்

வழக்கானது பிரதிவாதிகளின் நஷ்டஈடு தொகையோடு தள்ளுப்படி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.